In the Court of District Munsif cum Judicial Magistrate , Srirangam

CC.No.42/2023

PW–1

04.11.2025

| | | | |
|---|---|---|---|
| Name திருமதி. சித்ரா | | Caste | |
| க/பெ. லெட்சுமனசாமி | | Calling | வீட்டுக்குடிதனம் |
| Village ஸ்ரீரங்கம் | | Religion | |
| Taluk ஸ்ரீரங்கம் | | Age | 60/2025 |

அரசு தரப்பில் முதல் விசாரணை-

நான் தற்போது ஸ்ரீரங்கத்தில் வசித்து வந்து வீட்டுக்குடிதனம் நடத்தி வருகிறேன் கடந்த 21.09.2019ம் தேதி மாலை சுமார் 4.30 மணியளவில் வீட்டில் இருந்து மெடிக்கல் செல்வதற்காக சென்றேன் . அப்போது வீட்டின் அருகே வந்தபோது இரண்டு நபர்கள் ஒரு இருசக்கர வாகனத்தில் வந்து கழுத்தில் அணிந்திருந்த எனது 2 பவுண் மதிப்புள்ள செயினை பறித்துவிட்டார்கள். பிறகு நான் கத்திக்கொண்டே சென்றேன் என்னால் பிடிக்க இயலவில்லை. பிறகு காவல்நிலையம் சென்று ஒரு புகார் அளித்தேன். அந்த புகார் என்னிடம் காட்டப்படுவதுதான் . **அந்த புகார் அ.சா.ஆ-1 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.** பிறகு 3 மாதங்கள் கழித்து போலீசார் போன் செய்து செயின் பறித்த நபர்களை பிடித்துவிட்டதாக தகவல் சொன்னார்கள் . அதன்பிறகு செயினை நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக்கொண்டேன் .மேற்படி எனது செயினை பறித்தது ஆஜரில் உள்ள புளூ கலர் சட்டை அணிந்திருந்த ( வேலுசாமி) நபர் ஆவார். உயரமான நபர் இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்தார் அவர் ஆஜரில் உள்ள வெள்ளை சட்டை அணிந்திருந்த ( ஏசுதாஸ் (எ) சம்சுதீன் ) நபர்தான். எதிரிகளை சாட்சி சுட்டிகாட்டி அடையாளம் காட்டினார்.போலீசார் விசாரணை செய்தனர்.

(வழக்கு சொத்தை எடுத்து ஆஜர் செய்வதற்காக முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

Sd/-xxxx

Taken down by me in open court , read over to her and accepted by her as correct and made her signature

Sd/-xxxx

District Munsif – Cum - Judicial Magistrate,
Srirangam.

Adeeba